திரு. ம. கமலநாதன் : ஆரம்பிக்கப்படவிருக்கும் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிக்குக் கட்டட வசதி அளிக்கப்படுகிறதா ? கட்டடம் ஏதாவது கொடுத்தால் அங்கே இது ஆரம்பிக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர் இருப்பதற்கும் நல்ல வசதியுள்ள கட்டடமாகக் கொடுத்தால் அத்தகைய இடங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இதுவரை ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் எத்தனை கட்டப்பட்டிருக்கின்றன என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். இனி எத்தனை கட்டப்பட வேண்டும் என்று தெரிவிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் கொடுக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். இன்றைக்கு இருப்பது 156 ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள்.

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் நீராவி சலவைச்சாலை

*147 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் Steam Laundry வைக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்போது முதல் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) 1965-66-ல் மதுரை அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலை (Steam Laundry) ஒன்றை அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அது குறித்த வேலை இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

திரு. வை. சங்கரன் : அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதன் மதிப்பீடு 33,750 ரூபாய்.

சிவில் நீதிமன்ற பிராஸஸ் சர்வர்கள்

*148 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவில் கோர்ட் பிராஸஸ் சர்வர்களிடமிருந்து உத்தியோக உயர்வு, பிரயாணப்படி ஆகியவை சம்பந்தமாக நமது மாநில அரசாங்கத்திற்கு அண்மையில் கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளனவா ?